**செய்தி வெளியீடு எண்: 651** **நாள்:27.09.2019**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (27.9.2019) கோயம்புத்தூர், தமிழ்நாடு வன உயர் பயிற்சியகத்தில் நடைபெற்ற வனக்காப்பாளர்கள் பயிற்சி நிறைவு மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழாவில் ஆற்றிய உரை

---

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

வனக்காப்பாளர்கள் பயிற்சி நிறைவு மற்றும் சான்றிதழ் வழங்கும் விழா நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கி சிறப்பான தலைமையுரை ஆற்றிய மதிப்பிற்கும் மரியாதைக்கும் உரிய

மாண்புமிகு வனத்துறை அமைச்சர்
**திரு.திண்டுக்கல் சி.சீனிவாசன் அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே பங்கு பெற்று சிறப்பித்துக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர்
**திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களே!**

மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர்
**திரு.பொள்ளாச்சி வி.ஜெயராமன் அவர்களே!**

மாநிலங்களைவை உறுப்பினர் முன்னாள் அமைச்சர்
**திரு.ஏ.கே.செல்வராஜ் அவர்களே!**

சட்டப்பேரவை உறுப்பினர்கள்
**திரு.பி.ஆர்.ஜி. அருண்குமார் அவர்களே!**
**திரு.ஓ.கே.சின்னராஜ் அவர்களே!**
**திரு.வி.சி.ஆறுக்குட்டி அவர்களே!**
**திரு. எட்டிமடை எ.சண்முகம் அவர்களே!**
**திருமதி கஸ்தூரி வாசு அவர்களே!**
**திரு. வி.பி.கந்தசாமி அவர்களே!**

இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்று வரவேற்புரை ஆற்றிய
சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்களே!
வனத் துறைத் தலைவர் அவர்களே!
முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அவர்களே!
மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களே!
தமிழ்நாடு வன உயர் பயிற்சியகத்தின் இயக்குநர் அவர்களே!

வனத்துறையில் பயிற்சி முடித்து பணியில் இணையவிருக்கும் வனக்காப்பாளர்களே, அவர்களுடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்களே!
பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே!
பத்திரிகை மற்றும் ஊடகத்துறை நண்பர்களே!

அனைவருக்கும் என்னுடைய முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறேன்.

நீர் பாதுகாப்பு மற்றும் உயிர்ப்பன்மை பாதுகாப்பு ஆகியவற்றிற்கு வனம் மற்றும் வன உயிரினப் பாதுகாப்பு மிகவும் அத்தியாவசியமானதாகும். வளிமண்டலத்திலிருந்து கரியமில வாயுவினை நீக்கக்கூடியவைகளாக வனங்கள் செயல்படுகின்றன. பூமிக்கடியில் பரந்துள்ள மரம், செடி, கொடிகளின் வேர்கள் மண் வளத்தினைப் பிணைத்து, மண் அரிப்பினைத் தடுத்து, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளிலிருந்து நமக்கு பாதுகாப்பு அளிக்கின்றது. மனித இனத்தின் வாழ்க்கை மேம்பாட்டிற்கு அத்தியாவசியமான காடுகள் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம் என்பதில் மாண்புமிகு அம்மாவின் அரசு உறுதியாக உள்ளது. “வனமே வாழ்வு” என்பதை உணர்ந்தவர்கள் நாம். காடுகளை நேசித்த மன்னர்களையும், மக்களையும் தமிழ்நாடு வரலாறு நெடுகிலும் நம்மால் காண முடிகிறது.

1855ஆம் ஆண்டு அப்போதைய பிரிட்டிஷ் அரசு Dr.H.F.கிளக்ஹார்ன் அவர்களை மெட்ராஸ் பாரஸ்ட் டிபார்ட்மெண்ட் (Madras Forest Department) எனும் துறையை உருவாக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பணித்தது. அவரையே சென்னை மாகாணத்தின் முதல் வனப்பாதுகாவலராக நியமித்தது. அதன்படி உருவாக்கப்பட்டு, பின்னர் 1864–ஆம் ஆண்டு இந்திய வனத்துறையாக உருவெடுத்தது. **அந்த வகையில் வனப்பாதுகாப்பைப் பொறுத்தவரையில் தமிழ்நாடே ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் வழிகாட்டியாக இருந்துள்ளது என்பதை இங்கே பெருமையுடன்**

**குறிப்பிட விரும்புகின்றேன்.** அதன் பிறகு 1865, 1878, மற்றும் 1882 ஆகிய ஆண்டுகளில் இந்திய மற்றும் மெட்ராஸ் வனச் சட்டங்கள் இயற்றப்பட்டு வனங்கள் அரசுடைமையாக்கப்பட்டு, பாதுகாக்கப்பட்டு வருகிறது.

25.7.2018 அன்று **மாண்புமிகு அம்மாவின் அரசு, தனியே வனக் கொள்கை ஒன்றை வெளியிட்டது வரலாற்று சாதனையாகும். இந்த வனக் கொள்கையில் மாநிலத்தின் நீண்ட நெடும் கடற்கரை, கிழக்கு மற்றும் மேற்கு மலைத் தொடர்களின் சங்கமம், வறண்ட பருவநிலை மற்றும் நீர் பற்றாக்குறையை போக்க வேண்டிய அவசியம், வனப் பகுதிகளுக்கும் வெளியேயும் மரங்களை வளர்த்து அதன் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் போன்ற தனித்துவமான பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.**

2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு தொலைநோக்குப் பார்வை–2023, மாநிலம் முழுவதும் சமநிலைப்பட்ட சுற்றுச்சூழலை வலியுறுத்துகின்றது. 33 விழுக்காடு வனம் மற்றும் அடர்த்தியான பரப்பினை எய்திடும் வகையில் இலக்குகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இந்திய வன நில அளவை நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள 2017–ஆம் ஆண்டு அறிக்கையின்படி மாநிலத்தின் வனப்பரப்பு 26 ஆயிரத்து 281 சதுர கிலோ மீட்டர். இது மாநிலத்தின் மொத்த புவியியற் பரப்பில் 20.21 விழுக்காடாகும். இந்திய வன நில அளவை நிறுவனத்தால் 2015 மற்றும் 2017–ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட அறிக்கைகளை ஒப்பிடுகையில் தமிழ்நாட்டின் வனப்பரப்பு 75 சதுர கிலோ மீட்டர் அதிகரித்துள்ளது. வனம் மற்றும் வனத்திற்கு வெளியே, வனம் மற்றும் மரப் பரப்பினை

அதிகரிக்கச் செய்வதற்கான கொள்கையைப் பின்பற்றியதால் இச்சாதனை படைக்கப்பட்டது.

வன உயிரின பாதுகாப்புச் சட்டத்தை வலுப்படுத்தும் நோக்கோடு, 15 வன விலங்குகள் சரணாலயங்கள், 15 பறவைகள் சரணாலயங்கள், 5 தேசிய பூங்காக்கள், 4 புலிகள் காப்பகங்கள், 3 உயிர்க்கோள் பாதுகாப்பு மண்டலங்கள் போன்ற பல பாதுகாக்கப்பட்ட பகுதிகள் அறிவிக்கப்பட்டு வன உயிரின பாதுகாப்பில் இந்தியாவின் முன்னோடி மாநிலமாகத் தமிழ்நாடு திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

மாண்புமிகு அம்மா அவர்களின் பிறந்த தினத்தையொட்டி, மாநிலத்தில் பசுமைப் போர்வையினை அதிகரித்தல், சுற்றுச்சூழல் மாசினால் ஏற்படும் விளைவுகளைக் குறைத்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டு மாபெரும் மரம் நடவுத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களால் துவங்கப்பட்டது. இந்தத் திட்டம் மாண்புமிகு அம்மாவின் அரசால் 2011–12 முதல் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு இதுவரை **4 கோடியே 69 லட்சம் மரக்கன்றுகள் நடவு மற்றும் பராமரிப்பு பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை பெருமையோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். 2019–20ஆம் ஆண்டில் 71 லட்சம் மரக்கன்றுகள் நடுவதனை இலக்காகக் கொண்டு இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது.**

இதுபோன்று வனப் பெருக்கம் மற்றும் வனப்பாதுகாப்பு சம்பந்தமாக பல்வேறு திட்டங்களை வனத்துறை செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டங்களை சிறப்பான முறையில் செயல்படுத்த, வனத் துறையில் கடமையுணர்வுடன் பணியாற்றக் கூடிய பணியாளர்கள் மிகவும் அவசியம்.

இருக்கும் வனப்பரப்பை பாதுகாத்திடவும், வனத்திற்கு வெளியே வனப்பரப்பை விரிவுபடுத்தவும், வனத்துறைக்குப் போதுமான பணியாளர்களை நியமிப்பது அவசியமாகிறது. இந்த நிலையில் வனத்துறையில், 45 சதவீதத்திற்கு மேல் இருக்கும் களப்பணியாளர்களின் காலிப் பணியிடங்களைக் கருத்தில் கொண்டு, **இந்தியாவிலே முதன் முறையாக வனத் துறைக்கென தமிழ்நாடு வன சீரூடைப் பணியாளர் குழுமம் 2012–ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்களால் உருவாக்கப்பட்டுள்ளது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.**

இக்குழுமம் மூலம் **முதன்முறையாக இணைய வழித்தேர்வு அறிமுகப்படுத்தப்பட்டு, தமிழ்நாட்டின் அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு தேர்வுகள் நடத்தப்பட்டன. இத்தேர்வுக் குழுமத்தின் மூலம் கடந்த 2018–ஆம் ஆண்டு 726 வனக்காப்பாளர்கள், 152 ஓட்டுநர் உரிமத்துடன் கூடிய வனக்காப்பாளர்கள் மற்றும் 300 வனவர்கள் தேர்வு செய்ய அறிவிப்பு செய்யப்பட்டது. கடந்த 2018–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகள் என்னால் வழங்கப்பட்டன.**

**தமிழ்நாடு வனத்துறை வரலாற்றில் முதன்முறையாக 190 பெண் வனக் காவலர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பதை பெருமையுடன் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.**

தற்போது 595 நபர்கள் பயிற்சியினை நிறைவு செய்திருக்கிறார்கள். இவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன்.

பயிற்சி பெற்ற அலுவலர்களுக்கு 9 பாடங்களைக் கொண்ட வகுப்பறை பாடங்களோடு, பல்வேறு களப் பிரச்சினைகளை எதிர்கொள்ளும் விதமாக, தமிழ்நாடு

காவல்துறையின் **அதிரடிப்படை பயிற்சி, ஆயுதப் பயிற்சி**, வனத்துக்கு வெளியே வன விலங்குகளைக் கையாளும் விதம் போன்றவையும், தீ தடுப்புப் பணிகள், தேக்கு போன்ற மரங்களை அறுவடை செய்தல், நாற்றங்கால் உற்பத்தி மற்றும் தோட்டம் எழுப்புதல் போன்ற **அடிப்படை களப் பயிற்சிகளும்** வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். துறை சார்ந்த அலுவல் பயிற்சி மட்டுமல்லாது நீச்சல், வாகனம் ஓட்டுதல் போன்ற பயிற்சிகள் இவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

வனத்துறை பணியில் இணையவிருக்கும் உங்களுக்கு பல்வேறு பணிகள் காத்திருக்கின்றன. வன விலங்குகளைப் பாதுகாத்தல், ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து வனங்களைப் பாதுகாத்தல், காடுகளை வளர்த்தல் மற்றும் பராமரித்தல், வனத்துக்குள் வாழும் பழங்குடி மக்களின் காவலனாக இருத்தல், தாய்நாட்டின் இயற்கை வளங்களான விலங்குகள், பறவைகள், பட்டாம் பூச்சிகள், மரங்கள், செடிகள், கொடிகள் ஆகியவற்றை பாதுகாத்தல் போன்ற எண்ணற்ற வனம் சார்ந்த பணிகளை தாங்கள் திறமையுடனும், முழு கடமை உணர்வுடனும் செய்ய வேண்டும். **மாண்புமிகு அம்மாவின் அரசு உங்களின் பணிகளுக்கு என்றும் உறுதுணையாக இருக்கும் என்று உறுதிப்பட தெரிவித்துக் கொள்கிறேன்.**

**பயிற்சியை நல்ல முறையில் நிறைவு செய்த உங்களுக்கு மீண்டும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

மரங்கள் மண்ணின் வளங்கள்,
காற்றின் கரங்கள்,
நிலங்களுக்கு மரகதப் போர்வை போர்த்தி அழகு பார்க்கின்றன.
பறவைகளுக்கு சரணாலயம்,
இயற்கையின் வாசம்.

மரங்கள் மண்ணின் வளங்கள்,

காற்றின் கரங்கள்,
பறவைகளின் சரணாலயம்,
மரங்கள் அதிகரிக்கும்போது காற்று குளிர்கிறது,
வாயு மண்டலத்தில் உள்ள தட்பவெப்ப நிலையும் சீராகின்றது.

கார்பன்டை ஆக்ஸைடின் அடர்த்தி அதிகரிக்காமல் இருக்கிறது,
ஓசோன் படலத்தில் ஓட்டை விழாமல் இருக்கிறது,
பூமி புன்னகைக்கிறது,
பயிர்கள் செழிக்கின்றன,
நோய்கள் குறைகின்றன,
நீர்வளம் பாதுகாக்கப்படுகின்றது,
ஆரோக்கியமான மனித வளம்
நாட்டில் பெருகுகின்றது.

இயற்கையை காப்பதற்கும், வன விலங்குகள் பாதுகாப்பாக வாழ்வதற்கும், மனிதகுலம் மேன்மை அடைவதற்கும் வனத்துறை முக்கிய பங்காற்றுகிறது என்பதில் ஐயமில்லை. இந்த வனத்துறைப் பணியில் ஈடுபட்டுள்ள உங்கள் பங்கு மெச்சத்தக்க பணியாகும். இதனை சிறப்பாக செய்வதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் சென்னையிலுள்ள அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவை நவீனப்படுத்த வேண்டுமென்பதற்காக சிங்கப்பூர், இந்தோனேசியா, தாய்லாந்து போன்ற நாடுகளுக்குச் சென்று, அங்கே இருக்கின்ற மிருகக் காட்சிச்சாலைகளைப் பார்வையிட்டு, அங்குள்ள நவீன முறைகளை தமிழகத்தில் புகுத்த வேண்டுமென்று கருதி, அதை விரைவாக செயல்படுத்த இருக்கின்றோம் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் இன்னும் பல அரிய வகை மிருகங்களையும், பறவைகளையும் கொண்டு வருவதற்கு அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் மகிழ்ச்சிகரமாக இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தப் பணி மிக முக்கியமான பணி. எத்தனையோ துறைகள் இருந்தாலும் வனத் துறை என்பது இயற்கையை வளமாக்குகின்ற துறை. அந்தத் துறையில் நீங்கள் பயிற்சி பெற்று, பயிற்சி முடிந்து பணியில் அமர்ந்திருக்கின்றீர்கள். நீங்கள் சிறப்பாக பணியாற்றி தமிழகத்திற்கு பெருமை சேர்க்க வேண்டுமென்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

நன்றி! வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**